
# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 31

[உறுப்பினர்களுக்கு மட்டும்] பதிவு: 135/83



அருள்மிகு தேவி கருமாரி அம்மன்

நாகப்பாதிப்புப் பரிகார மந்தரம்
ஞாலகுரு சித்தர் கருவூரரால் வழங்கப்பட்டுள்ளது.

காணிக்கை: 1-00 ரூ

வெளியீடு: 26—7—86

# கருகுல சிலையமைப்பு

[சென்னைக்கருகில் வடபால் காரனோடையில் அமைந்து வரும்பதினென் சித்தர் பீடமான ''கருகுலத்தில்'' அமையவிருக்கும் சிலை வடிவமைப்புகள் பற்றிய குறிப்பு]

## நடுவில் வலம்புரிப் பிள்ளையார்

வலது கைப்பக்கம் துதிக்கையை வாழ்த்துகிற மாதிரி வைத்திருக்க வேண்டும். துதிக்கையின் நுனியில் எந்தப் பொருளும் இருக்கக் கூடாது. துதிக்கையின் நுனிவிரல் நன்கு நாகம் படமெடுப்பது போல் வாழ்த்துவதாக இருக்க வேண்டும். வலது மார்புக்கு நேராக வாழ்த்துகிற வண்ணம் துதிக்கை மடிய வேண்டும் பிள்ளையார் மூஞ்சுறுவின் மேல் அமர்ந்திருக்க வேண்டும். சிலைக்கு அடியில் பீடத்தில் குறைந்தது 2 அங்குல ஆழம் மேல் நோக்கி நடுமையத்தில் குழி செய்யப்பட்டிருக்க வேண்டும். அதற்குள் தான் உயிர்ப்புத் தகடு சுருட்டி வைக்கப்படும்.

## சித்தி

பிள்ளையாரின் இடதுபக்கம் சித்தி அமையவேண்டும். இது தலையில் நேராக உயர்ந்து செல்லும் நேர்க் கொண்டையைப் பெற்றிருக்க வேண்டும் அதாவது தலை முடியை உச்சிக்கொண்டை போட்டது போல் இருக்க வேண்டும். [இன்றைக்கு அஜந்தா கொண்டை என்று பொம்மைகளிலும், படங்களிலும் போடுவது போல]

ஒரு வலது கை கீழே இறங்கி, இடுப்புக்குக் கீழே முழங்காலுக்கு மேலே நிற்கும் திரிசூலத்-தைப் பிடித்துக் கொண்டிருக்கும், [திரிசூலம் தலையின் கொண்டை உயரத்திற்கு இருக்க வேண்டும்] 'மற்றொரு வலது கை' வலது மார்புக்கருகில் வைத்து வாழ்த்துவது போல இருக்க வேண்டும்.

ஒரு இடதுகை கீழே தொங்கவிட்டு கமண்டலம், திரிதண்டம், வைத்திருக்க வேண்டும். இன்னொரு இடதுகை உருத்திராட்சமும், தாமரை பலரும் வைத்திருக்கும் தோளில் கிளி அமர்ந்-திருக்கும். இரண்டு கால்களும் விரிந்த தாமரை பலர் பீடத்தில் இருக்க வேண்டும். மேலும் காதில் கையில் கழுத்தில், மூக்கில், இடுப்பில் உருத்திராட்ச மணிகளால் ஆன அணிகலன்கள் பூட்டப்பட்டிருக்க வேண்டும்.

உடை: திறந்த மார்பும், இடுப்பிற்குக் கீழே சேலையும் மட்டுமே இருக்க வேண்டும் 25 வயது முதல் 30 வயதுக்குரிய முகமும், உடலும் இருக்க வேண்டும்

## 'புத்தி

புத்தி பிள்ளையாரின் வலது பக்கத்தில் அமைய வேண்டும் 16 வயது முதல் 18 வயதுள்ள பருவமங்கை இளமையான கட்டுடல், கண்களிலும் முகபாவத்திலும் அரசகாம்பீரியம் இருக்க வேண்டும். மார்பில் கச்சு, இடுப்பில் சேலை, மாராப்பும் உண்டு, கழுத்தில் கையில், காதில் மூக்கில் தங்க (நகை) அணிகலன்கள் உண்டு. தலையில் ஆண்டாள் கொண்டை போல் வளைந்த கொண்டை கொண்டையிலும் தங்க அணிகலன்கள் உண்டு, 8 ஆரக்கால் உடைய சக்கரத்தின் மையத்தில் பாதங்கள் அமைக்கப்பட வேண்டும். ஒரு இடதுகையில் நெற்றி உயரத்திற்கு வேல் இருக்கவேண்டும் இந்த வேலைப் பிடித்திருக்கும் கை இடுப்புக்குக் கீழே முழங்காலுக்கு மேலே இருக்க வேண்டும் மற்றொரு இடது கை இடது மார்புக்கு நேரே வாழ்த்துவது போல் இருக்க வேண்டும் ஒரு வலது கை தோளுக்குமேலே மடக்கித் தூக்கி கையில் சிறிய உடுக்கை இருக்க வேண்டும். (சிவ பெருமான் கையில் இருப்பது போல) இன்னொரு வலதுகை வயிற்றிலே தொப்புளுக்கு நேராக பக்கவாட்டில் இடுப்புக்கு நேராக மடக்கி வைத்து கையிலே ஓலைச்சுவடி வைத்திருக்க வேண்டும்.

மேற்கண்ட வடிவங்களில் சிலைகள் தயாராகி வருகின்றன ' மேலும், பதினெட்டு அம்மன்களின் சிலைகளும் சிவன், பிரமன் திருமால், முருகன், வள்ளி தெய்வானை, சனிசுவரன், ஆஞ்சநேயர் சிலைகளும் நிறுவதற்கான குறிப்புகளும தரப்பட்டுள்ளன. உரிய நிதியின்மையால் வேலைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன இதைக் கண்ணுறுபவர்கள் அனைவரும் தங்களால் இயன்ற உதவியை தலைமைப் பீடத்திற்கு அனுப்பும்படி வேண்டுகின்றோம்

---

தொடர்பு:- தலைமைப் பொறுப்பாளர், சி. கவிக்குமார், B Sc.
56, NGO காலனி, பொன்னேரி-601204

# நாகப்பாதிப்புப் பரிகாரம்

48 வரிகளைக் கொண்ட இந்த நாகப்பாதிப்பு மந்தரத்தை வியாழக்கிழமையில் குருநாளில் பாதிப்புள்ளவர்கள் தலையோடு நீராடி ஈர உடையோடு பாம்புப் புற்று அல்லது பாம்பு உள்ள மரப் பொந்து (அ) மண்ணாலேரிகல்லாலோ, உலோகத்தாலோ செய்த நாகத்தின் சிலையோ இடமிருந்து வலமாகச் சுற்றி வந்து குறைந்தது எட்டுமுறை முழுமையாக ஓத வேண்டும் படையலாக பால், முட்டை, பசுங்குருதி (சேவல் குருதி, அறுத்துச் சூடாகப் புற்றுக்குள் அல்லது சிலைமேல் விடுவது சிறந்த பயனைத் தரும்) படைப்பதே பூசைக்கு நிறைவைத் தரும்.

இல்லங்களில் சிலையாகச் செய்யப்பட்ட நாகத்தின் மீது ஊற்றப்படும் பால் காய்ச்சி ஆற வைத்ததாக இருக்கவேண்டும். பசுந்தேன் கலந்ததாக இருக்க வேண்டும். புற்றின் அருகில் அல்லது மரப்பொந்துக்கு அருகே தேங்காய் ஓட்டில் அல்லது புதிய சட்டியில் ஊற்றிப் படைக்கப்படும் பால் காய்ச்சப்படாத பசும்பாலாக இருக்க வேண்டும்.

நேரடியாகப் பாம்பு வாழும் புற்றையோ பொந்தையோ வழிபடும் போது எட்டுமுறை, ஓதும் மந்தரத்தை வீட்டிற்குள் சிலைமுன் ஓதும்போது குறைந்தது 16 (பதினாறு) முறை அல்லது 32 (முப்பத்திரண்டு) முறை அல்லது 48 (நாற்பத்தெட்டு) முறை அல்லது 64 (அறுபத்து நான்கு) முறை ஓத வேண்டும்.

வீட்டில் பூசை செய்யும் போது படைக்கப்படும் பால் அல்லது வாராவாரம் பலிகொடுத்து சமைக்கப்படும் சேவல் கறி, குருதித் தொடர்பு இல்லாத பிறருக்கும் (அன்னியர்களுக்கும்) உண்ணக் கொடுக்கப்பட வேண்டும்.

நாகப் பரிகாரம் காண குருவழியாக அறிந்து நாகப்பரிகாரம் பூசையை செவ்வாய், வெள்ளி ஞாயிறு ஆகிய நாட்களில் செய்ய வேண்டும்.

(குறிப்பு: பூசையை குருநாளான வியாழக் கிழமையில் தான் ஆரம்பிக்க வேண்டும்.)

கண்டத்திலும், தொடையிலும், நாகப்பாதிப்பு உள்ளவர்கள் நேரில் குருவழியாக இட்டும் தொட்டும் சுட்டியுமே அருள் வழங்கப் பெற்றுப் பூசைகளைத் துவக்க வேண்டும். பிறப்பியல் கட்டங்களுக்குள் ஊழ்வினையால், வினையால் நாகப் பாதிப்பு இருந்தால் குருவழியாகவே பரிகாரம் செய்து கொள்ள வேண்டும்.

திருமணத்திற்குத் தடையாக அல்லது கணவன் மனைவி இணைந்து வாழுவதற்கு தடையாக நாகப்பாதிப்பு இருந்தால் தொடர்ந்து 48 நாட்கள் நாகப் பரிகாரப் பூசை செய்ய வேண்டும். அப்படி ஒரு மண்டல காலம் பூசை செய்து முடித்தவுடன் குருவழி ஆய்வு செய்து பரிகாரத்தைப் பலமண்டலங்களுககுத் தொடர்ந்து செய்யவேண்டும்.

**சிறப்புக் குறிப்பு:** கடுமையான நாகப்பாதிப்பு, 48மண்டலங்கள் தொடர்ந்து பரிகாரப் பூசை செய்தால்தான் நலமாகும். இதற்கு மிகுந்த பொறுமையும், நம்பிக்கையும், திருவருளும், குருவின் துணையும் தேவை. கருவாயிலோ, கண்ணிலோ நாகப்பாதிப்பு இருப்பின வாழ்நாள் முழுவதும் செவ்வாய், வியாழன் இரண்டு நாட்களிலும் தொடர்ந்து பரிகாரப் பூசை செய்தேயாக வேண்டும். குறைந்தது மூன்று அல்லது நான்கு பருவபூசைகளுக்கு ஒருமுறையாவது குருவழிசத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

நாகப் பாதிப்பை குருவழியல்லாமல் நலப்படுத்திக் கொள்வது இயலாது. நாகப்பரிகாரம் பூசைக்கேற்ப மாந்தரீக, ஏந்தரீக, தாந்தரீகச் சக்கரங்கள் பயன் படுத்த வேண்டும்.

அனாதிக் கருவூரர் குருபாரம்பரியம்

வழங்கும் நாகப் பாதிப்பு பரிகார மந்தரம்

வழங்குபவர்: குவலய குருபீடம் ஞாலகுரு சித்தர் கருவூரார்

# அனாதிக் கருவூரர் குருபாரம்பரியம் வழங்கும் நாகப் பாதிப்புப் பரிகார மந்தரம்

நாகா! அரவே! பாம்பே! முட்டை பால் மகிழ்ந்து ஏற்றிடு!
ஊழ்வினை, வினை, சூழ்வினை ஆள்வினை கடந்து காத்திடு
நெற்றி கன்னம் கண்டம் தொடை நாகவரியே நீங்கிடு
பைந்நாகமே படுநஞ்சின் வித்தே பரிகார மேற்று அகன்றிடு!
பரமேசுவரன் மகேசுவரன் ஈசுவரன் எல்லா வகை ஈசுவரன் பாதம் போற்றிடும் ஆணை!
உண்டாக்கிய பாதிப்புக்கள் போதும்-ம்உனை வேண்டுகிறோம் விலகிடு நீயாகவே
வறட்சி மிரட்சியகன்று சோதனைகள் நின்று விடிவளித்திடு முடிவாக
எப்பிறப்பிலும் பாதிக்காது நாகமென ஈசன்களனைவரையும் வேண்டுவதை ஏற்றிடு
உனக்குரிய படையலும் போற்றலும் ஈசனூர் வழி வழங்குகிறேன் காத்திடு
கருவாணை குருவாணை தருவாணை திருவாணை கூறியே வணங்குகிறேன்
மறுவாணை பெருமல் எருவாகிடட்டும் எல்லாப் பாதிப்பும் ஆணையிதுவே
நாக தேவா நஞ்சாய தத்துவச் சித்தாந்த வடிவே
மகேச அணிகலனே குண்டலினி ஓட்ட முடிவே
இறப்பின் பிறப்பே சத்திதேவி வாழ்வே வடிவே
ஐந்தொழில் தெய்வ ஆதரவே பதிலியே சத்தியே
ஐம்பூத நாயகமே ஐந்தெழுத்து விருப்ப அணியே
நகார பிறமண் மீது ஆணை, நாகமே காத்திடு
மகார நாரணன் மீது ஆணை, நாகமே காத்திடு
சிகார உருத்திரன் மீது ஆணை, நாகமே காத்திடு
வகார மகேசுவரன் மீது ஆணை, நாகமே காத்திடு
யகார சதாசிவம் மீது ஆணை, நாகமே காத்திடு
அதிபரான மகாதவ ஞானியர் மீது ஆணை, நாகமே காத்திடு
இன்னவர் அன்னவர் அனைவருமே காப்பாயினர் நாகமே உணர்,
என்னுடல் நன்னிலை பெற்றிட ஏற்றன அருளிடு, நாகமே
நகாரமான நிலத் தலைவர் வழி வேண்டுகிறேன், நீங்கிடு நீ
மகாரமான நீர்த் தலைவர் வழி வேண்டுகிறேன், நீங்கிடு நீ
சிகாரமான நெருப்புத் தலைவர் வழி வேண்டுகிறேன், நீங்கிடு நீ
வகாரமான வளித் தலைவர் வழி வேண்டுகிறேன், நீங்கிடு நீ

யகாரமான ஆகாயத் தலைவர் வழி வேண்டுகிறேன், நீங்கிடு நீ
ஐந்தெழுத்து நமசிவாயமும் பராசத்தியும் பூணும் சிறப்புடைய நீ வேண்டுதலை ஏற்றிடு
நற்றவமியற்றி நான் வேண்டுவதை ஏற்று விலகிடு நாகமே பாம்பே அரவே
ஓம் நமச்சிவாய சிவாயநம பராசத்தி நாமேயாகுக நமதேயாகுக
ஓம் நச்சுப்பாதிப்புக்கள் நலிந்து மெலிந்து அகன்றிடட்டும் நசிநசி! நசிநசி!
ஓம் மாயப் பாதிப்புக்கள் மசிந்து மறைந்து அகன்றிடட்டும் மசிமசி! மசிமசி
அகர உகர மகரமே ஐகாரமாகி ஓங்காரப் பாதுகாப்பு நல்கட்டும்
அனைத்தும் சுவையேயாகுக! பயனே யாகுக! நலமேயாகுக! காவலேயாகுக!
ஓம்சிவாவாசி! ஓம்சிவாவாசி! ஓம்சிவாவாசி! ஓம்சிவாவாசி! ஓம்சிவாவாசி!
ஓம்சிவவசி! ஓம்சிவவசி! ஓம்சிவவசி! ஓம்சிவவசி ஓம்சிவவசி!
ஓம் நங் நாங்! ஓம் மங் மாங்! ஓம் சிங் சீங்! ஓம் வங் வாங்! ஓம் யங் யாங்!
நாகப் பாதிப்புக்களனைத்தும் நீங்கிட நல்லருள் சித்தித்தது நமச்சிவாயமே!
நாகம் நீங்கி நகார மண்ணே நல்லுடல் ஆயிற்று நமச்சிவாயமே
நாகம் நீங்கி மகார நீரே மண்ணிய குருதிஆயிற்று நமச்சிவாயமே
நாகம் நீங்கிச் சிகார நெருப்பே மெய்யுறு வெப்பு ஆயிற்று நமச்சிவாயமே
நாகம் நீங்கி வகாரக் காற்றே வயங்கு மூச்சு ஆயிற்று நமச்சிவாயமே
நாகம் நீங்கி யகார ஆகாயம் அலைமனம் ஆயிற்று நமச்சிவாயமே
நாகம் நீங்கி நிலையாய் ஐந்தும் நின்று தொழிற்படுகிறது நமச்சிவாயமே
நாகம் நீங்கிக் கலையால் இயங்கும் கடத்துளே கடவுளாகிட்டது நமச்சிவாயமே
நாகம் நீங்கித் தலையில் தங்குகிற ஈசனே! சிவனே! பரம்பொருளே நமச்சிவாயமே
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!

அநாதிக் கருவூரர் குருபாரம்பரியம் வழங்கும் நாகப்பாதிப்புப் பரிகார மந்திரம்

---

குறிப்பு:-

பிற்காலத்தில் வந்த பீடாதிபதிகள் இம் மந்தரத்தை யொட்டியே பல நாகப் பாதிப்பு மந்தரங்கள் காலத்திற்கேற்ப கூட்டியும்குறைத்தும் வெளியிட்டனர் ஆனால், இம்மந்தரம் தான் மூலமந்தரமாகும். இம் மந்திரத்தைத் தான பெரும் பாலும் பயன்படுத்தி வந்துள்ளார்கள். இவையன்றி, மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகம் ஆக நான்கும் உள்ளன. இவைகளைப் பற்றி குருவழி அறிக.

# குரு நிலையும் ஒன்பது கோள் நிலையும் - 2

ஒன்பது கோள்களும் உணவுத் தானியங்கள், பருப்புக்கள், எண்ணைவித்துக்கள், நவரத்தினங்கள் முதலிய அனைத்துக்கும் காரணமாக இயக்கச் சத்தியாக இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் மழை, காற்று, நிலநடுக்கம், நெருப்பால் அழிவு, போர், தலைவர்கள்சாவு, தனிமனிதர்நோய்நிலை, ஓசுநிலை...... முதலிய அனைத்துக்குமே இந்த ஒன்பது கோள்களின் நிலைகளும் இயக்கங்களுமே காரணமாகும. எனவேதான், 'நல்லநேரம்', 'கெட்டநேரம்' என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளிலும் பலவகையான பகுப்புக்களை உண்டாக்கினார்கள் பதினெண் சித்தர்கள். இது, பகுத்தறிவுக்கும விஞ்ஞானத்துக்கும் ஏற்றதுதான், இதேபோலத்தான், மேற்படி ஒன்பது கோள்களையும் அடிப்படையாகக் கொண்டு பிறப்பியல் [சாதகம்] வரியியல் [கைரேகை]. எண்ணியல், பெயரியல் மனையியல், அங்கவியல்,......... முதலிய பல வகை அறிவியல்களை விஞ்ஞானங்களாகத் தோற்றுவித்து வளர்த்திட்டார்கள் பதினெண் சித்தர்கள், இவர்கள், இப்படி. ஒன்பது கோள்கள் பற்றிய பேருண்மைகளின் அடிப்படையில் தோற்றுவித்து வளர்த்திட்ட விஞ்ஞானங்கள் 'அனைத்தையுமே மனிதவாழ்வின் மேம்பாட்டுக்கும், உயர்வுக்கும், செம்மைக்கும் உதவும் வண்ணமாகத்தான் படைத்தார்கள். இதுதான், இவர்களின் சிறப்பு இச்சிறப்பினால்தான் இவர்கள், வழங்கிய 'இந்துமதம்' எனும் 'சித்தர்நெறி' உலகம் முழுதும் பரவி நல்லாட்சி நடத்தும் ஒன்றாயிற்று, இன்றும் கூட பதினெண்சித்தர்களின் இந்துமதம் ஒரு சமூக விஞ்ஞானமாகவே வாழுகிறது. எனவேதான் இன்றைக்கு. மெய்யான இந்துமதத்தில் உள்ள விஞ்ஞானப் பேருண்மைகள் விளக்கியுரைக்கப்படுகின்றன.

இன்றைய இ ம இ. யின் தலைவர், குருதேவர், அருளாட்சிநாயகம், ஞானாச்சாரியார், குவலய குருபீடம், இந்துமதத்தந்தை. அரசயோகி அண்ட பேரண்ட ஆதிசத்திகள் சத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்...... இவரது தந்தையாரால் முழுக்க முழுக்கக் கணிதமும், விஞ்ஞானங்களும் ஆங்கிலேயர்களின் சூழலில் இளங்கலைப் பட்டம் வரை படிக்க வைக்கப்பட்டார்; பிறகுதான் தாய்மொழிப்புலமைக்காகமுதுகலையும்,பண்டாரகர்பட்டத்துக்குரிய (Ph.D) ஆய்வுப்படிப்பும் பெறுமாறு செய்யப்பட்டார் ஆனால் தமிழின இயக்கங்களும், தமிழ்நாட்டுச் சமய சமுதாய அரசியல் கலை இலக்கியக் கழகங்களும் தலைவர்களும் பெரும்பாலும் உண்மையான தமிழ் உணர்வும், பற்றும், பாசமும் பிடிப்புமில்லாத சந்தர்ப்பவாதப் போக்கையும் தன்னலப் போக்கையுமே கொண்டிருக்கிறார்கள். எனவே தான இவர் எண்ணற்ற ஆண்டுகளாக எடுத்துக்கூறியும், எழுதியும் வருகின்ற தமிழினம் பற்றிய அரிய பெரிய பயன்மிகு பேருண்மைகள் உரிய பயனை நல்க முடியவில்லை

இவற்றையெல்லாம் எண்ணியே, இவர் இ. ம. இ இயக்கத்தையும் அதன் கீழுள்ள பன்னிரண்டுக்கும மேற்பட்ட நிறுவனங்களையும் புதிய வலிமையும வளமும் பெறச் செய்யச் செயல்பட வேண்டிய அவசியம ஏற்பட்டது உலக மூல மதமும முதல் மதமும, தாய்மதமும, அண்ட பேரண்டமாளும மதமுமான மெய்யான இந்து மதத்தின் மூலவர்களான தமிழர்கள் —> திராவிடர்கள் —> இந்தியர்கள்....... இன்றைக்கு இந்து மதத்தைக் காப்பாற்ற முன்வராமல்; இந்துமதத்தை இழித்தும் பழித்தும், எதிர்த்தும, வெறுத்தும், மறுத்தும், பகைத்தும...... செயல படுகிறார்கள். இதனால் தான் இந்தியாவின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் தன்னம்பிக்கையோ, தன்மான உணர்வோ, இனமான உணர்வோ, மொழியுணர்வோ, இன ஒற்றுமையோ, பண்பாட்டு ஒருமைப்பாடோ பெறமுடியாமல் அடிமைப்பட்டும் மிடிமைப்பட்டும் அல்லலுற்று அனாதைகள் போல் வாழுகிறார்கள் ............ இவற்றுக்கெல்லாம முடிவுகட்டி இந்து மதத்தின் மூலம தமிழகத்துக்கும் தென்னாட்டுக்கும், இந்தியாவுக்கும, ஆசியாக்கண்டத்துக்கும், உலகத்துக்கும் படிப்படியாக நன்மைகளை உருவாக்கவே பகுத்தறிவுப் போக்கிலும, விஞ்ஞானச் சூழலிலும் வளர்க்கப்பட்ட மெய்யான இந்து மதத்தின் அடிப்படைகளான வானியலும், விண்ணியலும், இவை சார்ந்த கலைகளும் விளக்கப்படும் பணி துவக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

# கேள்வியும் நானே..........! பதிலும் நானே........

❋ ஏழிசை வல்லவர் யார்?

1. ச — தேவர்களை மகிழ்விப்பது
2. ரி — இருடிகளை மகிழ்விப்பது
3. க — அமரர்களை மகிழ்விப்பது
4. ம — கந்தவர்கள் எனப்படும் வானவர்களை மகிழ்விப்பது
5 ப — வழிபடு நிலையங்களில் மகிழ்ச்சி தருவது
6. த — கருவறைகளில் மகிழ்ச்சி தருவது,
7. நி — வெட்டவெளிக் கருவறைகளில் மகிழ்ச்சி தருவது.

என்ற இந்த ஏழு எழுத்துக்களிலும் தோன்றக் கூடிய ஒலிகளின் நுட்பங்களை உணர்ந்து பாடக்கூடியவர்களே ஏழிசை வல்லவர்கள் இந்த ஏழிசைக்குரிய முதல் எழுத்துக்கள் இயற்கையில் பிறக்கின்ற பயிரின உயிரின நீர் நிலை இயக்க ஒலிகளின் அடிப்படைகளில் உருவாக்கப்பட்டவையே. வானவில்லின் ஏழுவண்ணங்களும் இவற்றிற்கு அடிப்படை என்றும் கூறப்படும்.

❋ யார் யாரை மெய்தோயத் தரையில் விழுந்து வணங்கக்கூடாது?

1 கையில் உயிருள்ள பொருட்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள்
2. சாத்திற தோத்திற, நேத்திற, அத்திற, சூத்திற அறிவில்லாதவர்கள்
3. நாத்திகர்கள். போலிபத்தர்கள், புகழுக்காக பிறருக்கு உதவுபவர்கள் அறநெறியை புறக்கணிப்பவர்கள்
4. மிகுந்த சீற்றத்துடன் இருப்பவர்கள், கட்டுப்பாடில்லாமல் சிரிப்பவர்கள் குலுங்கிக் குலுங்கி அழுபவர்கள்
5. எண்ணெய் தேய்த்து நீராடிக் கொண்டிருப்பவர்கள்
6 பேராசைக்காரர்கள், பொறுமைக்காரர்கள், திருடர்கள், குடிகேடர்கள்.
7. படுத்திருப்பவர்கள், போகத்தில் ஏக்கம் உள்ளவர்கள் உறக்கமில்லாதவர்கள்
8 பூசை செய்து கொண்டிருப்பவர்கள், உணவு உண்டு கொண்டிருப்பவர்கள்

❋ 'ஆச்சாரம்' — என்று எழுதுவது தவறு?

ஆச்சாரம்—> ஆசரியம—> ஆன்மீக உலகத்தில் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டவை இவை ஆசரியங்கள் என்று குறிக்கப்படுகின்றன இவற்றை 'ச்' என்ற சந்தி எழுத்துச் சேர்ந்து 'ஆச்சரியங்கள்' என்று எழுதுவது தவறு சித்தர் ஏளனம்பட்டியாரின் எழுத்துக் குவியில்களில் இந்தத் திருத்தம தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

❋ வழிபாட்டில் இடமிருந்து வலமாகச் சுற்றிவருவதா? அல்லது வலமிருந்து இடமாகச் சுற்றி வருவதா? எப்பொழுது? எங்கே? எதற்கு? எப்படியெப்படி? வலம வந்து வணங்கவேண்டும்.

1. சிவனுக்கு இடமிருந்து வலமாக ஐந்து முறை சுற்றி வரவேண்டும்.
2. அனைத்து வகையான சத்திகளுக்கும ஐந்து முறை அல்லது ஒரு முறை இடமிருந்து வலமாகச் சுற்றி வரவேண்டும்.
3. முருகன, பிள்ளையார், விநாயகர், கணபதி, ஐயனர், கருப்பு முதலியவர்களுக்கு இடமிருந்து வலமாக மூன்று முறை சுற்றி வரவேண்டும்
4 திருமால், பிறமண், குபேரன், இயமன், முதலியவர்களுக்கு இடமிருந்து வலமாக நான்குமுறை சுற்றி வர வேண்டும்.
5 9 கோள்கள், சனீசுவரன், சூரியன், சந்திரன், பைரவர், பலி, பீடம். கொடிமரம முதலியவர்களை இடமிருந்து வலமாக ஏழு முறை சுற்றி வர வேண்டும்.

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

# சித்தர் இராமாயணம் – 3

இலக்குவன் அச்சத்தால் நடுநடுங்கி சீதையைத் தான் கொலை செய்யாமல் உயிரோடு காட்டில் விட்டு வந்த செய்தியைக் கூறினன் அதன் பேரில்தான் அவர்கள் இருவரும் சீதையைக் காட்டில் தேடிக் கண்டுபிடித்து அவளோடு தங்கினர்கள் இவர்கள் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கருவுற்றிருந்த சீதை இலங்கைக்கு வர மறுத்து விட்டாள். மேலும் சீதை தன்னைப் பொறுத்தவரை உலகத்தவர்க்கு இறந்த -வளாகவே வாழ விரும்புவதாகக் கூறி விட்டாள் ஏனென்றல் இலக்குவன் தன்னைக் கொலை செய்யாமல் விட்டு விட்ட செய்தி வெளியுலகுக்குத தெரிந்தால் அயோத்தி அரச குடும்பத்தார்கள் எப்படியும் மீண்டும் தன்னைக் கொலை செய்ய முயல்வார்கள் என்று தெளிவாகக் கூறினள். அதனல் திரிசடையும் சூர்ப்பனகையும் சீதை உயிரோடு இருக்கும் செய்தியை இலங்கையில் எவருக்கும் தெரிவிக்க வில்லை ஆனல் இருவரும் மாறி மாறி இலங்கைக்கும் சீதை வாழ்ந்த அயோத்தி காட்டுக் குடிலுக்கும் மாறிமாறிச் சென்று சீதையைக் காப்பாற்றினர்கள். சீதையின் வேண்டுகோளால் வால்மீகியும் யக்ஞவல்லியும் சீதை உயிரோடிருப்பது பற்றி யாரிடமும் எதுவும் தெரிவிக்க வில்லை. சீதைக்காகவே வால்மீகியின் ஆசிரமம் பெரியதாகவும் வசதி மிகுந்ததாகவும் அமைக்கப்பட்டது யக்ஞவல்லியின் நம்பிக்கைக்கும் வால்மீகியின் நம்பிக்கைக்கும் உரியவர்கள் மட்டுமே சீதை தங்கியிருந்த ஆசிரமப் பகுதிக்கு வருவதற்கு அனுமதிக்கப் பட்டார்கள். அதாவது, சீதை அங்கு தங்கியிருக்கும் செய்தி மிகுந்த இரகசியமாகக் காப்பாற்றப்பட எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

அந்த ஆசிரம வட்டாரக் காட்டுப் பகுதிகளில் காவல் காக்கும் பொறுப்பு சூர்ப்பனகை யிடம் ஒப்படைக்கப் பட்டது. அவள் தனது நம்பிக்கைக்குரிய அரக்கியர்கள் பலரை இலங்கையிலிருந்து அயோத்தி மாநகரை சுற்றியுள்ள அனைத்து காடுகளையும் பாதுகாக்கும் பணியில் நியமித்தாள். அதாவது அயோத்தி அரசைச் சார்ந்த யாருமே சீதை வாழ்ந்த காட்டுப் பகுதிக்குள் நுழைய முடியாதபடிக் கடுமையான ஏற்பாடுகள் செய்திட்டாள் சூர்ப்பனகை. இதேபோல் திரிசடை தன்னுடைய நம்பிக்கைக்குரிய அரக்கியர்கள் பலரை இலங்கை யிலிருந்து கொண்டு வந்து சீதைக்குப் பணி செய்யவும், சீதை வாழ்ந்த ஆசிரமத்து உட்காவலையும், புறக்காவலையும் திறமையாகவும் கடுமையாகவும் நிகழ்த்துவதற்கும் ஏற்பாடுகளைச் செய்தாள். இலங்கையில் அரக்கர் குலத்தைச் சேர்ந்த ஆண்களே ஏறத்தாழ இல்லையென்று கூறுமளவிற்கு இலங்கையில் எண்ணிக்கைக்குரிய மிகச்சில முதியவர்களும் சிறுவர்களுமே இலங்கையில் இருந் தார்கள். எனவேதான் சீதைக்கு குழந்தை பிறந்து அது வளர்ந்து பிறகு இலங்கையிலிருந்து அரக்கர் குல இளைஞர்களையும் முதியவர்களையும் அழைத்து வந்து அயோத்தி அரசோடு போரிட்டு சீதைக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி தேவதையின் தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்பதே அவர்களின் செயல்திட்டம். அதற்குச் சீதையும் ஒப்புக் கொண்டாள். இதே சமயத்தில் இலங்கையை ஆண்டு கொண்டிருந்த வீடணன் தன் அண்ணன் மகளான சீதை இராமனலும் இலக்குவனலும் கொலை செய்யப்பட்டு விட்டாள் என்ற செய்தி கிடைத்து மிகவும் கலங்கிப் போனன். அவனுக்கிருந்த ஆத்திரத்தில் இலங்கையிலிருந்த வயோதிகர்களையும் சிறுர்களையும் பெண்டிர்களையும் படையாகத் திரட்டிக் கொண்டு அயோத்தி வந்து இராமனுடன் போர் புரியவே துடிதுடித்தான்.

ஆனல் சீதை இறந்த பிறகு அயோத்தி அரசகுலத்தைக் கண்டித்தோ தண்டித்தோ கிடைக்கக் கூடிய பலன் ஏதுமில்லை, என்பதையெண்ணியே செயலற்றுக் கிடந்தான். இருந்தாலும் அவனுக்கு இராமனிடம் பழைய பத்தியும் விசுவாசமும் இருக்குமோ என்றஞ்சியே சூர்ப்பனகையும் திரிசடையும்

அவனிடம் சீதை உயிரோடு இருப்பதைப் பற்றிய செய்தியைக் கூறவேயில்லை. ஆனால் சூர்ப்பனகையும் திரிசடையும் தங்களுடைய நம்பிக்கைக்குரிய அரக்கரிடமும் அரக்கியரிடமும் இராவணனும் மேகநாதனும் (இந்திரசித்து) கொலை செய்யப்பட்டதற்குக் காரணமாக இருக்கும் அயோத்தி அரச குடும்பத்தாரைப் பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்று கூறி வெறியுணர்ச்சியை வளர்த்திட்டார்கள். இந்த வெறியுணர்ச்சி தான் பிற்காலத்தில் இலவகுசர்கள் அயோத்தி அரசையே 48 மாதங்களுக்கு அதிரடித் தாக்குதலால் ஆட்டிப் படைத்துதி இறுதியில் இராமனையும் இலக்குவனையும் தங்களுடைய தவறுகளுக்குத் தண்டனையாகத் சரயு நதியில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளத் தேவையான எல்லா உதவிகளையும் பாதுகாப்புகளையும் வழங்கிற்று.

யக்ஞவல்லியின் குறிப்புக்களின்படி சித்தர் இராமாயணம் மற்ற எந்த இராமாயணத்திலும் கூறாத அளவிற்கு இராமாயணக் கதாநாயக நாயகிகளின் வயதையும் நிகழ்ச்சிகளின் கால அளவையும் மிகமிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் அறிவிக்கின்றது. அதாவது இராமனும் இலக்குவனும் தன்னுடைய 12 வது வயதில் தான் விசுவாமித்திரரோடு காட்டுக்குப் போனார்கள். விசுவாமித்திரர் பல யாகங்களை 9 மாதங்கள் கோள்களுக்காகவும், 12 மாதங்கள் இராசிகளுக்காகவும், 27 மாதங்கள் விண்மீன்களுக்காகவும், செய்து முடிக்க 48 பருவ பூசைகளை (முழுநிலவு நாளில்) 48 அமாவாசை வேள்விகளை, 48 மூன்றாம் பிறைப் பூசைகளைச் செய்து முடித்தார். அதாவது, கந்தழி நிலைப் பூசைக்கும் (சூரிய பூசை) கொடிநிலைப் பூசைக்கும் (மூன்றாம்பிறை), வள்ளி நிலைப் பூசைக்கும் (அமாவாசை வேள்வி) உரிய கால அளவுகளைச் செலவிட்டு தன்னுடைய பூசைகளில் முழுவெற்றி பெற்றார். அதற்குப் பிறகு தன்னை அரசகுருவாக ஏற்றுக்கொள்ளாத சூரிய குலத்தைக் கேலிக்கும் நலிவுக்கும் மெலிவுக்கும் அழிவுக்கும் உரியதாக்குவதற்காக 16 வயதான இராமனை 32 வயதான சீதையைச் சூழ்ச்சியாக மணக்க செய்தார். இராமனும் சீதையும் அயோத்தியில் 20 ஆண்டு காலம் இனிய இல்லறம் நடத்தினார்கள் அந்த நெடிய இடைவெளியிலேயே சீதை அரக்கர்குலத்தைச் சேர்ந்தவள் என்ற பேருண்மை கண்டுபிடிக்கப்பட்டது ஆனால் இராமன் அரக்கர் குலத்தைச் சேர்ந்த சீதையை மறக்கவோ துறக்கவோ தயாராக இல்லை. அதே நேரத்தில் அரக்கர் குலத்தைச் சேர்ந்த சீதை கருவுற்று விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் அயோத்தி அரச குடுபத்தை பற்றிக் கொண்டது. எனவேதான் இந்த அரச குடும்பத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்து, தசரதனைப் பலி கொடுத்தாலும் பாதகமில்லை என்று துணிந்து இராமனையும் சீதையையும் மரவுரி அணிந்து துறவிகளாகி 14 ஆண்டு காலம் புண்ணியத் துறைகளில் நீராடி அருளுறு திருத்தலங்களை வழிபட்டு நாடு திரும்ப ஆணையிட்டார்கள் என்று மிகத்தெளிவான செய்தி இருக்கிறது.

இராவணன் சீதையை இலங்கைக்கு அழைத்துச் சென்று அசோகவனத்தில் 18 மாதங்கள் தங்க வைத்த பின்பே இராமன் வானரப் படையோடு இலங்கைக்கு வந்தான். இராமன் இராவணனோடு 18 மாதங்கள் போர்புரிந்தே சீதையை மீட்டான். இப்படியாகச் சீதை இலங்கையில் இராமனைப் பிரிந்து 36 மாதங்கள் தனித்திருந்தாள் என்ற செய்தி தெளிவாக விளக்கப்படுகிறது. ஆக, இராமன் தன்னுடைய 50 வது வயதில் அயோத்தி திரும்பி முடிசூட்டிக் கொண்டான் அப்பொழுது சீதைக்கு வயது 66 சீதை தீக்குளித்து வந்தாலும் அரக்கர் குலத்தின் பதிலியாக அயோத்தி அரசதலத்தில் வேரூன்றி நிலைத்து விடவேண்டும் விரும்பியதாலும் 14 ஆண்டு கால வனவாசத்தில் துறவற வாழ்க்கையில் பிரிந்திருந்தாலும், இராமனோடு இனிய இல்லறம் நடத்தி விரைவில் கருவுற்றாள். அவள் அயோத்தி வந்த 3 மாதத்துக்குள் கருவுற்று விட்டாள் என்ற செய்தி அயோத்தி அரச குடும்பத்தையே கதி கலங்க வைத்தது அதனால் தான் வசிட்டர் உட்பட அனைவரும் ஒன்று சேர்ந்து இராமன் வாயாலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டு இலக்குவனை சீதையைக் கொலை செய்யக் கூடிய ஒரு நிலையை உருவாக்கினார்கள். ஆனால் விசுவாமித்திரரோ இலக்குவனைத் தனியாகச் சந்தித்து அறநெறியை உணர்த்தியும், சூர்ப்பனகை, திரிசடையால் ஆபத்து வரும் என்று அச்சுறுத்தியும், கருவுற்ற சீதையைக் கொல்வது கொடிய பாவம் என்று விளக்கியும், இலக்குவனின் கொலை முயற்சியை முறியடித்தார். இதே விசுவாமித்திரர் கருவுற்ற சீதை தன்னுடைய தாய்தந்தை, உடன் பிறந்தார் முதலியோரின் அழிவை எண்ணியும்; தன்னுடைய கணவனே தன்னைக் கொலை செய்ய ஆணையிட்டதை நினைத்தும்; தற்கொலை செய்து கொள்ள நேரிடுமோ என்று அஞ்சி ஓடிவந்து அவளைத் தடுத்தார். [தொடரும்]



# இந்தியாவில் மார்க்சீயம்-13

—சித்தர்

மார்க்சு ஜெனரல் கவுன்சலின் மத்திய அலுவலகத்தை நியூயார்க் மாற்றினர் அதுமட்டுமின்றி இதே மாநாட்டில் ஒவ்வொரு நாட்டிலும் சுதந்திரமாக இயங்கக் கூடிய விடுதலை அமைப்புக்களை அமைக்கவேண்டுவது; வழியமைப்பது; இதனைச் சங்கத்தின் சட்டமாக்கினர்கள்.

1875 மே 5 இல் 'புரட்சித் தத்துவச் செயல் முறை'யை விளக்கி 'கோதா வேலைத் திட்டம் பற்றிய விமர்சனம்' எழுதப்பட்டது. இது ஒரு புகழ்மிக்க செயலாகும். 1877 - 78 ஆண்டுகளில் 'வார்வாரிஸ்' பத்திரிக்கையில் தொடர்ந்து எங்கெல்சு வரைந்த 'டூரிங்குக்கு மறுப்பு' என்ற கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலாகி வெளிவந்தது. 1878 சூலை மாத ஆரம்பத்தில் அதேவாண்டு செப்டம்பரில் எங்கல்சின் மனைவி 'லிச்சி பர்னசு' (லிஸ்ஸி பர்ன்ஸ்) இறந்தார்

பின்னர்தான். அரசியல் வானில் திரிந்து கொண்டிருந்த சந்தர்ப்பவாதத்தை ஆயுதமாகக் கொண்டு உலவிய 'பேர்ன்ச்டைன்' 'ஓக்ரபர்க்' 'சராம்' ஆகியோரை இருவரும் வெளிப்போந்து கடுமையாகத் தாக்கினர்கள். அவர்களுக்கு யாரும் ஆதரவுக் தரக்கூடாது என்று குறித்த அறிக்கையை 'செர்மன் சோசல் டெமாக்ரடிக் கட்சி' யிலுள்ள 'பெபல்', 'லீப்க்னெக்ட்' 'பிராக்கே' மற்றும் இதர பிரமுகர்களுக்கு அனுப்பி வைத்தனர். 1880 மார்ச்சு 20 முதல் மே' மாதம 5 ஆம் தேதி முடிய பிரான்சு தொழிலாளர்க்கிடையில புதிய விஞ்ஞானக் கம்யூனிசு கருத்துக்களைப் பரப்பவும் முயற்சியில் எங்கல்சு ஈடுபட்டார் இதற்காக இவர் தனது 'டூரிங்குக்கு மறுப்பு' என்ற நூலின் மூன்று அத்தியாயங்களாகிய 'கற்பனை சோசலிசமும் விஞ்ஞான சோசலிசமும்' 1என்ற தலைப்பில் 'ரெவியு சோசிலிட்டி என்ற பத்திரிக்கையில் வெளி-யிட்டார், இதனுல் பிரான்சு தொழிலாளர்க்ளுக்கிடையில் எங்கல்சுக்கும் மார்க்-சுக்கும்' மிகப் பெரிய செல்வாக்கு ஏற்பட்டது

இதனுல் பிரான்சு தொழிலாளர் கட்சியின் அமைப்பாளர்களான 'கேட்' 'லபர்க் இருவரும் மார்க்ஸையும் எங்கல்ஸையும் தேடிவந்து தங்களுடைய கட்சியின் வேலைத் திட்டத்தை உருவாக்கித் தரும்படி கேட்டுப் பெற்றனர் ஆக பிரான்சு நாட்டு தொழி-லாளர் கட்சி மார்க்சும் எங்கெல்சும் வகுத்துத் தொகுத்து தந்த புரட்சிகரமான வேலைத் திட்டத்தின் மூலம் மிகச்சிறந்த வளர்ச்சியினைப் பெற்றது தொடர்ந்து 1882 வரை எங்கெல்சு முனபு அதாவது 1873யிலே எழுதத் துவங்கிய 'இயற்கையின் இயங்குவியல்' என்ற நூலைத் தொடர்ந்து எழுதி நிறைவு செய்தார்.

[தொடரும்]

7-ம் பக்கம் தொடர்ச்சி

6 பறவை, விலங்கினங்கள், சமாது வலமிருந்து இடமாக நான்கு முறை சுற்றி வரவேண்டும்

7 துறவிகளின் சமாது வலமிருந்து இடமாக ஏழு முறை சுற்ற வேண்டும்.

8 இல்லறத்தார் சமாதை வலமிருந்து இடமாக ஒன்பது (9)முறைச் சுற்றி வர வேண்டும்.

9 உயிருள்ள கன்னிப் பெண்களை ஒன்பது முறை வலமிருந்து இடமாகச் சுற்றி வர வேண்டும்.

10 வாவரசிகளை (வாழ்வு+அரசிகள்—> இல்லறத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் சுமங்கலிப் பெண்கள்) வலமிருந்து இடமாக நான்கு அல்லது ஐந்து முறைச் சுற்றி வரவேண்டும்.

11 பசுக்களை வலமிருந்து இடமாக மூன்று முறைச் சுற்றிவர வேண்டும்.

12 பூசையில்லாத அல்லது பாழடைந்த ஆலயங்களை வலமிருந்து இடமாக இரண்டு முறைச் சுற்றிவர வேண்டும்

13 சித்தி வழங்கக் கூடிய குருவை, குருதேவரை, அருளை அநுபவப் பொருளாக வழங்கக் கூடிய அருளாளர்களை வலமிருந்து இடமாக பதினாறு (அ) பதினெட்டு முறைச் சுற்றி வந்து ஒவ்வொரு முறையும் அவரது மெய்தொட்டு வணங்கவேண்டும்.

வணங்குபவர் தனித்திருந்தால் அல்லது அறைக்குள் இருந்தால் அல்லது இருளில் இருந்தால் வணங்கப்படுபவரின் ஒப்புதல் பெற்று ஆரம்பத்திலும் முடிவிலும் முத்தங்கள் கொடுத்து வணங்க வேண்டும்.

குறிப்பு: வணங்குபவரின் இடதுகை, வலதுகை அடிப்படையில்தான் இடமிருந்து வலம் வருவது (அ), வலமிருந்து இடம் வருவது கையாளப்பட வேண்டும்.

- சாதாரண பத்தி வழிபாட்டிற்கும், அருட்சித்தி பெறும் வழிபாட்டிற்கும் விளக்கம் தேவை ?

விளக்கம்: சாதாரண வழிபாட்டைச் செய்புவர்கள் நீராடித் தலையைத் துவட்டி உலர்த்தி உலர்ந்த ஆடைகள் உடுத்தி, மணிகள் உருத்திராட்சம் முதலியவை அணிந்து; நெற்றிக்கு நீர் விட்டுக் குழைத்த திருநீறுபூசி சமைத்த உணவுப் பொருட்களை படையலிட்டு வழிபாடு செய்வது மரபு.

அருட்சித்தி பெறும் வழிபாட்டி தலையோடு நீரில் மூழ்கி எழுந்து தலையைத் துவட்டாமல் ஈரஉடையுடன் நின்று தண்ணீரையே படையலாகக் கொண்டுப் பூசை செய்வது உலர்ந்த ஆடைகளை அணிந்திருப்பவர்கள் ஒரு செம்புதண்ணீரையாவது தலையில் ஊற்றி தலையையும், ஆடையையும் நனைத்துக் கொண்டுதான் பூசை செய்ய வேண்டும். குருதிப்பலி, நெருப்பிலிட்டுச் சமைக்காதபசுமையான காய், கறி கிழங்கு கனி, மலர், இலைகள்...... முதலியவைகளைப் படையலாகப் பயன் படுத்துதல் மரபு, நெருப்பு வளர்த்து வழிபடவேண்டும், அல்லது சுடலையின் ஈமத்தீ (ஏமததீ) -யில் அவிர் பலிகளைப் போட்டு வழிபட வேண்டும்.

# மூன்ருவது விடுதலை

## தலைமைப் பொறுப்பாளர்

இந்த நாட்டில் இதுவரை இரண்டு விடுதலைப் போர்கள் நடைபெற்றுவிட்டன 'முதல் போரில் நாம் அடிமையாய் இருக்கின்ருேம்!' என்பதை உணர்ந்தோம் இரண்டாவதுபோரில் நமக்குநாமே அடிமையாக்கிக் கொள்ள முனைந்தோம் நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன; இன்னமும் நாம் நம்மைப்பற்றிச் சிந்திக்கவேயில்லை. சீர் தூக்கிப் பார்க்கவேயில்லை. நாம் இன்னமும் அடிமைகளாகத்தான் இருக்கின்ருேம் பொருளாதார ரீதியாக வணிக ரீதியாக, தொழில் ரீதியாக, கலை ரீதியாக, பண்பாடு ரீதியாக, மொழி ரீதியாக ........ நாம் மேலைய நாட்டானுக்கு அடிமையாகத்தான் உள்ளோம் நம்மை விட்டு அடிமை விலங்கு ஒடியவே இல்லை. இன்னும் காரிருள் விலகவேயில்லை

இன்றைய இலங்கை முதல் அன்றைய அமெரிக்கச் சுதந்திரப்போர்கள் வரை உரிமை—விடுதலை துப்பாக்கி முனையிலேதான் பிறந்தது ஆனல் நமது விடுதலை யோ......? அதனுல்தான் என்னவோ நம்மை விட்டு அடிமை விலங்கு விலகவேயில்லை!

நாம் விடுதலை பெற்ற அந்த நாளின் அதிகாலையில் எத்தனையோ உள்ளங்கள் பூரித்துநின்றன நாம் சாதிக்கப் போகின்ருேம்!. சாதிக்கப் போகின்றவைகளுக்கு வித்துக்களைத் தூவப் போகின்ருேம்! என்று...... ஆனல், வருங்காலம் வளங்காலமாக மாருமல் கற்காலமாகிட்டது. நமது விடுதலை, இரசியாவின் பிப்ரவரி புரட்சியாக மாறிவிட்டது அக்டோபர் புரட்சியின் பயனைப்போல அறுவடை செய்யவே விழைகின்ருேம்.

நாம் நம்மை மட்டுமா ஏமாற்றி வருகின்ருேம்? வருங்கால இளைய சமுதாயத்தையுமல்லவா ஏமாற்றுகின்ருேம்? இன்றைய இளைஞர்கள் நாட்டின் உலவும் அறியாமைப்பற்றியோ, வறுமையைப் பற்றியோ, இல்லாமைப்பற்றியோ, இயலாமைப்பற்றியோ, சாதிச்சண்டைகளைப் பற்றியோ, பெண்ணடிமைப் பற்றியோ... இன்னபிற சமய சமுதாய அரசியல் சுரண்டல்களைப் பற்றியோ சிந்திக்கத் தயாராக இல்லை நம்மைச் சுற்றி மேலும் மேலும் இறுகிக் கொண்டிருக்கும் உணர்வுகளின் அடிமைத்தளைகளை உணரவேயில்லை,

அதைவிட, நாட்டில் நல்லதொரு எதிர்க்கட்சியே இல்லை என்பதை அறிய மறந்துவிட்டோம். எந்தத் துறையிலுமே எதிரணிகள் இல்லை, இந்தநிலை நீடித்தால் .........? நாட்டின் ஒற்றுமை, பாதுகாப்பு, இனஉரிமை, மொழிஉரிமை,...இவைகளை மீண்டும்' அடகு வைக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை. இதற்குத் தேவை மூன்ருவது அணி - இயக்கம். மூன்ருவது இயக்கத்தின் தலைமைதான் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை அமைக்கவேண்டும் அதற்குரிய இளைஞரணியை அமைத்திடும் பணியில்தான் ஈடுபட்டுள்ளது' 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்'

கல்வியின் பெயரால், மொழியின் பெயரால், மதத்தின் பெயரால், கலை, தொழில், இலக்கியத்தின் பெயரால் நடைபெறும் சுரண்டல்களை, ஏமாற்றுக்களை முறியடிப்போம்! 'பொழுது போக்கு அம்சங்களைக்கொண்டு வாழ்க்கையைத் திசைத்திருப்பிச் சிந்திக்கவொட்டாமல்சதி செய்யும் தீயசத்திகளைமுறியடித்து. நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற தேவை' மூன்ருவது விடுதலைப் போராட்டம்

—சி. கவிக்குமார்

---

KVS பிரிண்டர்ஸ் தேரடி தெரு பொன்னேரி